3rd March 1969]

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னையிலுள்ள புற்றுநோய் மருததுவமனையை விரிவுபடுத்தினால் அதிகப்படியான நோயாளிகளுக்கு உதவியாக இருக்குமென்று சொன்னார்கள். தஞ்சையிலிருந்து வருகிறவன் நான். தஞ்சையில் பெரிய ஜெனரல் ஆஸ்பத்திரி இருக்கிறது. திருநெல்வேலியில் இருப்பவர்கள்கூட சென்னைக்கு வந்துதான் வைத்தியம் செய்து கொள்ளும் துர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள். சென்னை, செங்கல்பட்டில் மாத்திரம் அமைக்காமல் திருநெல்வேலி, தஞ்சை போன்ற இடங்களில் புற்றுநோய்க்கான சிகிச்சை அமைத்தால் ஏழைகளுக்குப் பயன்படும் என்பதால் அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது காஞ்சிபுரத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் துணைகொண்டும், நார்வே அரசாங்கத்தின் உதவியினாலும் 10 லட்சம் ரூபாய் செலவழித்து, ஒரு ஆராய்ச்சி நிறுவனம் இந்த அரசாங்கம் நிறுவியிருக்கிறது. அது அடையாறில் உள்ள புற்றுநோய் இயக்குனரின் துணை கொண்டு காஞ்சிபுரத்தில் ஏற்பாடாகிறது. காஞ்சீபுரத்தில் ஏற்பாடாகிற ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து 'புற்றுநோய்தான்' என்று வரையறுக்கப்பட்ட நோயாளிகளுக்கு அடையாறில் சிகிச்சை தரவேண்டுமென்றுதான் ஆரம்பிக்கிறார்கள். இது தொடர்ந்து ஆண்டுக்கு 70 ஆயிரம் நார்விஜியன் க்ரோன் விதம் ஐந்தாண்டு காலத்திற்கு அந்த நார்வே அரசாங்கம், அதற்கான உதவி செய்யத் தயாராக இருக்கிறது. தொடர்ந்து அடையாற்றில் இருக்கிற மருத்துவமனை விரிவடையலாம் என்ற நம்பிக்கை இதன் மூலம் பெறப்படுகிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI : The Cancer Institute at Adyar has been the successful effort of the work of the All-India Women's Conference. Will the Government take steps to help it remain as a mere voluntary body and give all the Government help possible for its expansion and development ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாதாது மகத்தான பணியின் காரணமாகத்தானே அல்லவோ எப்படியிருப்பினும் அரசாங்கம் அதற்கு நல்ல முக்கியத்துவம் தந்து இந்த உதவியை செய்து வருகிறது. மேலும் அந்த மருத்துவமனை சிறப்படையத் தான் மேலும் பல திட்டங்கள் தீட்டி வருகிறது.

Higher Grade Physical Education Teachers

* 101 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any resolution passed at the Physical Education Conference held during the first week of March 1967 at Sirkali requesting the revision of scales of pay for Higher Grade Physical Education Teachers has been received by the Government; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம். இம் மாநாடு 1968-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது.

(இ) உயர்நிலை உடற்கல்வி ஆசிரியர்களில் சம்பள விகித உயர்வுக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்த போதிலும் உயர்நிலை சான்றிதழ்ப் பெற்றுள்ள உடற் கல்வி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற தனிச் சம்பள மாகிய ரூ. 5, 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

THIRU G. KRISHNAMOORTHY : Thanks to the Government.

திரு. எம். சங்காலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, மாநாட்டினர் வேண்டிக் கொண்ட சம்பள உயர்வு வீதம் எவ்வளவு? அரசு வழங்கியது எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாநாடு சம்பள விகிதத்தையே மாற்றியமைக்க விரும்புகிறது. 1960-ல் பே-கமிஷன் அனுமதித்த சம்பளத்தை நாம் கொடுக்கிறோம். ஆகையால் இப்போது சம்பள விகிதத்தை மாற்றத் தயாராக இல்லை. கொடுக்கிற அலவன்ஸ் ஹையர்கிரேடுக்கு ரூ. 5-விருந்து 10-க்கு உயர்த்தப்பட்டி ருக்கிறது.

Language Teachers.

* 102 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the alternative arrangements made by the Government for employing the language teachers, who have lost their jobs consequent on the implementation of the Two-language formula in schools?

(THE HON. THIRU S. MADHAVAN : Orders have been issued—

(1) for the absorption of the existing qualified Hindi and ohter language Pandits in regular service in suitable alternate posts;

(2) for the conduct of in-service ttaining for Pandits, Grades I and II who have passed S.S.L.C. but do not have secondary grade training, so as to enable them to appear for the T.S.L.C. (Secondary Grade) ;

(3) for giving protection of their scale of pay in whatever capacity they are absorbed.

(1) இப்போதுள்ள தகுதி பெற்ற இந்திப் பண்டிதர்களையும் பிறமொழிப் பண்டிதர்களையும் தகுந்த மாற்றுப் பதவிகளில் பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் படிற்சியளிக்கவும்;

(2) அவர்கள் டி.எஸ்.எல்.சி (இடைநிலைத்தரம்) தேர்விற்குச் செல்லும் வகையில் இடைநிலைத்தரப் பயிற்சி பெறாத, ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்சசி பெற்ற I, I -ம் நிலையைச் சேர்ந்த பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சியளிக்கவும்;